# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19A, ருக்மினி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 600 008
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tnerc.gov.in

செ.வெ. எண்.3 / 2014
நாள் 12.9.2014

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஐந்து மண்டலங்களின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் சிறப்பு கலந்தாய்வுக் கூட்டத்தினை சென்னையில் 10.9.2014 அன்று நடத்தியது.

மின்சார மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் மாண்புமிகு நீதியரசர் திரு. மு. கற்பக விநாயகம் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார்கள். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் திரு. சு. அட்சயகுமார், உறுப்பினர் திரு. கெ. ராஜகோபால், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழக அரசின் எரிசக்தித்துறை அரசுச் செயலாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களை வரவேற்று பேசினார்.

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், மின்நுகர்வோருக்கும், மின்பணி நிறுவனத்திற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து பேசியதுடன் மின்நுகர்வோர் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார். மேலும், அவர் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்கள் அதிக அளவில் அதாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது 1 வீதம் 43 மன்றங்கள் உள்ளன என நினைவு கூர்ந்தார். தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மின்உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அதனால் மின்தேவை மற்றும் மின்வழங்கலுக்குமிடையேயான இடைவெளி குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மின்குறைதீர்ப்பாளர் திரு. ஆ. தர்மராஜ், மாநிலத்தில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் செயல்பாடுகள் குறித்து சுருக்கமாக உரையாற்றினார்.

மண்டலங்களின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களின் உறுப்பினர்கள், மின்குறைதீர்ப்பு குறித்த தங்களது அனுபவங்களை பகிர்ந்துகொண்டதோடு நுகர்வோர்களுடைய உண்மையான குறைகளை சட்டத்தின் வழிமுறைகளின்படி களைவதால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களின் செயல்பாடுகள் குறித்து தாங்கள் முழு திருப்தியடைவதாகவும் தெரிவித்தார்கள்.

எரிசக்தித்துறை அரசு செயலாளர், மின்நுகர்வோர் குறைதீர்ப்பதற்காகவும், நுகர்வோர் மனநிறைவடைவதை அதிகரிப்பதற்காகவும் தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து எடுத்துரைத்தார். மாநிலத்தில் மின்நுகர்வோர்களின் புகார்களை பதிவு செய்வதற்கான வசதிகள் மிகவும் எளிதானது என்றும் கூறினார். மின் கட்டணங்களை வங்கிகள், அஞ்சலகங்கள் மற்றும் தானியங்கி பண வழங்கி எந்திரங்கள் மூலமாக செலுத்துவதும் எளிதாக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மின்நுகர்வோருக்கு மின் நுகர்வு கட்டணம் செலுத்துவதற்கான உரிய நாள் மற்றும் செலுத்தப்படவேண்டியுள்ள மின்நுகர்வு கட்டணம் ஆகியவற்றினை குறுஞ்செய்தி தகவல் வழியாக தெரிவிப்பது போன்ற மின்பணி நிறுவனத்தின் முயற்சிகளையும் இந்த வசதியினை தற்போது சுமாராக ஒரு கோடி மின் நுகர்வோர் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நுகர்வோர் குறைதீர்க்கும் ஆரம்ப நிலை அமைப்பு என்பதாலும், மாநிலத்தில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் சரியான செயல்பாட்டின் தேவை குறித்து மாண்புமிகு நீதியரசர் திரு. மு. கற்பக விநாயகம் அவர்கள் வலியுறுத்தியதோடு இந்த அமைப்பின் மூலம் மின்நுகர்வோர் குறைகளை பெருமளவு தீர்த்து வைக்கலாம் என்றும் பூசல்கள் நீதிமன்றத்திற்கு செல்வது தவிர்க்கப்படும் என்றும் தெரிவித்தார். மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மூலம் 60 நாட்களில் உடனடி தீர்வு பெறலாம் என்றும் இந்த வகையான பூசல்களை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதாயின் தீர்ப்பு பெறுவதற்கு பல மாதங்கள் அல்லது வருடங்கள் ஆகலாம் என்றும் இந்த வசதியினை மின்நுகர்வோர் பயன்படுத்தும் பொருட்டு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்கள் குறித்து மின்நுகர்வோருக்கு பரவலாக விளம்பரப்படுத்தபடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு நீதியரசர் அவர்களின் கருத்தினையேற்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடு குறித்து கோட்ட வாரியான கூட்டங்களுக்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஏற்பாடு செய்வதற்கு முயற்சிகள் எடுக்கும் என்று தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் உறுதி கூறினார்.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினர் திரு. கெ. ராஜகோபால் நன்றியுரையாற்றினார்.

**(சி. குணசேகரன்)**
செயலாளர்